| STC No.572/2024 | PW:1 திரு. சுஹைப் | 12.02.2026 |
|---|---|---|

<u>(எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317/ 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)</u>

<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u> :

11. 3–ஜி மொபைல் ஷாப்பில் வைத்து நான் காசோலை வாங்கினேன் என்றால் சரிதான். 12.07.2024 அன்று காசோலை வாங்கினேன். அன்று யார்யார் இருந்தார்கள் என்றால் கடையின் உரிமையாளர் இருந்தார், என்னுடன் சேவியர் என்பவர் இருந்தார். அந்த கடையில் உரிமையாளரின் பெயர் ரபீக் என்று நினைக்கிறேன், சரியாக தெரியவில்லை.

12. கோகுலம் சிட் பண்டில் எனது நிலுவை தொகையை சரியாக செலுத்தாததால் அதன் மேலாளர் சந்தோஷ் மற்றும் சதீஷ் ஆகியோர்கள் எதிரியின் வீட்டிற்கு சென்று தொந்தரவு செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது முடிந்த போன கதை, அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை.

13. எனது Business Partner வெளிநாடு செல்லும் போது இப்ராஹிம் எனக்கு கொடுக்க வேண்டிய ரூபாய் 2 இலட்சத்தை எதிரி நான் கோகுலம் சிட் பண்டிற்கு செலுத்த வேண்டிய ரூபாய் 2 இலட்சத்தை செலுத்தி கொள்கிறேன் என்று ஒப்புக்கொண்டு நானும் இப்ராஹிமும் நடத்திவந்த கடையை எதிரி எடுத்துக்கொண்டார் என்று சொன்னால் சரிதான், அவர் வெளிநாடு போகவே இல்லை.

14. அதற்கு பிணையமாக இரண்டு காசோலைகளை நான் எதிரியிடம் வாங்கினேன் என்றால் வாங்கினேன், அதை ஒவ்வொரு சீட்டும் முடியும்

போது கொடுப்பதாக சொல்லியிருந்தேன். அதை கொடுத்துவிட்டேன். அதை திருப்பி கொடுத்ததாக சொல்வதற்கு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

15. நான் சொல்வது போல் எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்று சொன்னாலும், அவர் பிணையமாக கொடுத்த காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த பணமும் கொடுக்க வேண்டியதில்லை என்றாலும், நான் அந்த 2 காசோலையை திரும்ப கொடுக்க கடமைபட்டவர் என்று சொன்னாலும், நான் அந்த காசோலைகளை திரும்ப கொடுத்துவிட்டேன்.

16. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை எண் பற்றி எனக்கு தெரியுமா என்றால் 164557 ஆகும். 164557 மற்றும் 164559 ஆகிய இரண்டு காசோலைகளை தான் நான் எதிரியிடம் வாங்கினேன் என்றாலும், அதை தான் நான் எதிரியிடம் திரும்ப கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, 164557 என்ற காசோலையை மட்டும் தான் எனக்கு கொடுத்தார்.

17. எதிரி என்னிடம் கடனாக பெற்ற ரூ.1,50,000/-ஐ எவ்வளவு நாட்களில் திருப்பி தருவதாக சொன்னார் என்றால் 1 மாதத்தில் திருப்பி தருவதாக சொன்னார், அதற்கு நான் வட்டி வாங்கினேனா என்றால் இல்லை. அவர் பணத்தை திருப்பி தராததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரூ.25,000/- மட்டும் திருப்பி கொடுத்தார்.

18. ரூ.25,000/– ஐ எப்போழுது எனக்கு திருப்பி கொடுத்தார் என்றால் 12.07.2024 அன்று கொடுத்தார். அதை கோல்டன் பேக்கரியில் வைத்து கொடுத்தார்.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

Sd/- G.SARAVANAKUMAR, B.A., B.L., (HON'S)
**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**